-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்காபுர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான லங்காபுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,

- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியின் 23220010774487 இலக்கமுடைய சேமிப்புக் கணக்கிற்கு முந்திய ஆண்டுக்கு ஏற்புடையதாக கிடைத்திருந்த வட்டி ரூபா296,020 மீளாய்வாண்டின் வட்டி வருமானக் கணக்கிற்கு சீராக்கியமையினால் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | வட்டி வருமானம் சரியாக பதிதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 06 ஆம் திகதி இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட 2300306 இலக்கமுடைய நிலையான வைப்பு பொருட்டு மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக கிடைக்க வேண்டிய வட்டித் தொகையான ரூபா 117,123 சீராக்கப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டு இல.02 மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது | சரியாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 10,649,801 ஆக இருந்தபோதிலும், அந்த வருமானத்தை ரூபா 5,545,611 என பதிந்ததன் காரணமாக | சரியான பட்டியலிடப்பட்ட வருமானம் கிடைத்த பின், மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் | சரியான வருமானத்தை இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ரூபா 5,104,190 குறைவாக பதியப்பட்டிருந்தது. | உண்மையான வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | பதிதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,878,900 ஆக இருக்க வேண்டியபோதிலும், அந்த வருமானத்தை ரூபா1,624,267என நிதிக் கூற்றுக்களில் பதிவுசெய்தமையினால், மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,254,633ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரியான பட்டியலிடப்பட்ட வருமானம் கிடைத்த பின், மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான வருமானத்தை இனங்கண்டு பதிதல் வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களின்படி, இருப்புக்களின் குறைவு ரூபா 1,527,677 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்ட காசுப் பாய்வுக்கூற்றில் இருப்புக்களின் அதிகரிப்பு ரூபா 558,969 ஆகவும் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சரியாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் பொருட்டு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். நாளேட்டு குறிப்பு மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டுக் கொள்கையின்படி அட்டுறு அடிப்படையில் கணக்குகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டிருந்த 06 கணக்கு மீதிக்கும் நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்ட அட்டவணையின்படி மீதிக்கும் இடையே ரூபா 2,892,462 வேறுபாடு காணப்பட்டது. | மூடப்பட்டுள்ள வியாபார நிலைய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் கைத்தொழில் வரி வருமானத்தினுள் பதியப்பட்டிருத்தமை மற்றும் நீர் விற்பனை வருமானத்தினுள் நீர் மிகைக் கட்டணம் அடங்கியிருந்தமையினாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் மற்றும் பயன்பாட்டு ஏடுகளை இணக்கி சரியாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பொறித்தொகுதி பொருத்துதல் | 2,731,115 | | குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு வருகின்றன என. | ஏடுகள் நாளதுவரையாக்கி பேணுதல் வேண்டும். |
| | 15,715,888 | கணிப்பாய்வு அறிக்கை | | |
| பொறி உபகரணம் | 18,928,266 | பதிவேட்டு ஆவணம் | | |
| கனிணி | 1,455,876 | | | |
| தளபாடம் | 7,500,932 | | | |
| | --------------- | | | |
| | 46,332,077 | | | |
| | ========= | | | |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் | 2019 திசெம்பர் மாதம் முதல், சபையின் அமய மற்றும் பதிலீட்டு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்களுக்கு ஏற்புடையதாக ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு அனுப்ப வேண்டிய 03 சதவீத உதவுதொகை சபையினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய சட்டத்தின்படி செயலாற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிஞ்சிய செலவு ரூபா 11,789,264ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை மிஞ்சிய செலவு ரூபா 6,624,736 ஆக இருந்தது

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 858,400 | 607,190 | 807,650 | 408,850 | 681,900 | 165,000 | 165,000 | - |
| (ii) | வாடகை | 20,554,415 | 18,281,261 | 18,918,650 | 1,980,844 | 18,560,707 | 17,329,003 | 16,574,036 | 2,618,233 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,147,560 | 348,787 | 458,487 | 220,600 | 1,169,100 | 1,386,323 | 1,056,023 | 330,300 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 4,412,260 | 4,409,484 | 4,258,623 | 643,629 | 4,820,020 | 3,485,248 | 2,992,480 | 492,768 |
| | | 26,972,635 | 23,646,722 | 24,443,410 | 3,253,923 | 25,231,727 | 22,365,574 | 20,787,539 | 3,441,301 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

சபையின் வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று 12 – 20 ஆண்டுகளாக 11 இறைச்சிக் கடைகளிலிருந்து மொத்த பெறுமதியான ரூபா 1,350,308 ஆன நிலுவை வாடகையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிதென அறிவிக்கப்பட்டுள்ளது | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 10 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள மீன் பலகைகள் மற்றும் வார சந்தை குத்தகை 05 மீதிகளின் பெறுமதி ரூபா93,990 தீர்க்கப்படவில்லை. | நிலுவையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | லங்காபுர பிரதேச சபைக்குச் சொந்தமான 40 கடைஅறைகள் உள்ளன என்பதுடன் அவற்றுள் 09 கடைஅறைகள் மீளாய்வாண்டில் பயன்பெறாத நிலையில் இருந்தன. | உரிய கடைஅறைகளை வாடகைக்கு எடுப்பதற்காக ஒருவரும் முன்வராமையினால் என. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில், 39 கடை அறைகளுக்கு ரூபா 799,540 வாடகைக் கட்டணம் பட்டியலிடப்பட்டதெனினும், அதற்கான வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடைஅறைகளை மதிப்பீடு செய்வதற்காக விலைமதிப்பு திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என. | மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று, வர்த்தக உரிமங்கள் அனுமதிப்பத்திரம், , கைத்தொழில் அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் பெறாமல் அதிகார பிரதேசத்தில் பேணப்பட்டிருந்த 489 நிறுவனங்களிடமிருந்து ரூபா 408,550 நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **செயல் நடவடிக்கைத் திட்டம்**<br>வருடாந்த பாதீட்டுத்திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 19 பணிகள் வருடாந்த செயல் | சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், வருடாந்த செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 22 பணிகளில் 07 பணிகளே மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்தன. | பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் இல்லாத காரணத்தினால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியவில்லை என. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **எதிர்பார்த்த பயன்களை பெற முடியாமை** | | |
| | சபை அதிகார பிரதேசத்தில் 03 இலத்திரனியல் நூலகங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா9,392,385 செலவிட்டு தொடர்புடைய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு, அதற்காக ரூபா2,302,032 பெறுமதியான உபகரணங்கள் கிடைத்திருந்தபோதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் எதிர்பார்த்த பணிகளை ஆரம்பிப்பதற்கு தவறியிருந்தது. | ஈடுபடுத்துவதற்கு அறிவுள்ள அலுவலர்கள் மற்றும் உரிய காவற்காரர்கள் இல்லாமையினால் ஆரம்பிப்பதற்கு முடியவில்லை என. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 03 நீர் செயற்றிட்டங்கள் மூலம் வருமானமாக ரூபா1,499,018 ஈட்டும்போது அதற்காக உறப்பட்ட செலவினம் ரூபா 2,002,005 (தேய்மானம் நீங்கலாக) ஆக இருந்தமையினால் மீளாய்வாண்டில் இச்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட செயல்பாட்டு நட்டம் ரூபா502,987 ஆக இருந்தது. | அதிகார பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் சில கிராமங்களுக்கு பிரதேச சபையின் மூலம் நீர் வழங்கப்படுவதுடன், குடிநீர் வழங்குதல் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள கடமை என்பதால் நீர் சேவை வழங்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல்பாட்டு நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமான தம்பால வார சந்தையை அபிவிருத்திக்காக | நட்டத்தை அறவிட்டுக்கொள்வதற்கு உரிய ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் | அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியாக |

| | | |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரருடன் ரூபா17,761,650 தொகைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இருந்ததுடன், ரூபா3,552,328 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தபோதிலும், ஒப்பந்ததாரர் சம்பந்தப்பட்ட கட்டுமானத்தை மேற்கொள்ளாமையினால் சபைக்கு ஏற்பட்ட ரூபா 2,711,283 நட்டத்தில் ரூபா1,554,515 தீர்க்கப்பட்டிருக்கவில்லை | கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், நிலுவைத் தொகையில் இருந்து ரூபா450,000.00 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள**

| | கணக்காய்வு அவதானிப்பு | | | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பல்வேறு செயற்றிட்டங்களின் கீழ் சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல் சபை அதிகார பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள மற்றும் வழங்கப்பட்ட பின்வரும் சொத்துக்கள் செயலற்ற நிலையில் இருந்தன. | | | பின்வரும் காரணங்களின் நிமித்தம் செயலற்ற நிலையில் உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை நிறுவுவதற்கு முன் தேவையை இனங்காணுதல் வேண்டும். |
| | சொத்து விபரம் | பெறுமதி<br>ரூபா. | செயலற்ற காலம் | | |
| | தல்பொத பஸ் தரிப்பிடம் | 2,230,568 | 07 வரு. | பஸ் வராமை. | |
| | அரிசி மா உற்பத்தி பேக்கரி உபகரணம் | 541,000 | 03வரு. | பயன்படுத்துவதில்லை. | |
| | தல்பொத வார சந்தை கட்டடம் | 2,377,452 | 01வரு. | வியாபாரிகள் வராமை. | |
| | சேதன உர உற்பத்திப்பொறி | 88,000,000 | 02 வரு. | செலவு குறைந்த முறையியல் பயன்படுத்துவதென. | |
| (ஆ) | பிபிதெமு பொலன்னறுவை செயற்றிட்டத்தின் கீழ் ரூபா25,100,072 செலவில் நிர்மாணிக்கப்பட்டு லங்காபுர பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்ட புலதிசி பொன் மண்டப கட்டடம் மீளாய்வாண்டில் குறை பயன்பாட்டில் இருந்தது. | | | பணம் அறவிடாமல் அதிகார பிரதேசத்தில் நடைபெறும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளுக்கும் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் செயற்படடத்தப்பட்ட பெறுகைகள் தொடர்பான பெறுகை முடிவுகள் அடங்கிய ஆவணமொன்று பேணப்படவில்லை. | 2024ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை ஆவணமொன்று பேணப்படுதல் வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியினர் தகவலின்படி, சபையில் 13 வெற்றிடங்கள் நிலவின. | ஈடுபடுத்துவதற்கு போதிய எண்ணிக்கையில் சாரதிகள் இல்லாமையினால், அமய பதவியினர் சாரதி பதவியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| 1993 பெப்ரவரி 28 ஆம் திகதி லங்காபுர பிரதம அமைச்சினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 53-5059 இலக்கம் கொண்ட மிட்சுபிஷி கெப் வண்டி சவையின் பெயரில் கைமாற்றப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கைமாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |